# அரபிக் கல்லூரிகளை அழிக்கப்போகும் ஆலிம்சாக்கள்

இப்னு மர்யமின்

இந்த உலகம் முழுவதும் ஆலிம்சாக்கள் குறிப்பிட்ட அளவு காணப்படுகின்றார்கள். 'ஆலிம்சா' என்றால் யார்? என்று பார்த்தால், நாமெல்லாம் சிறுபிள்ளைகளாக இருந்த போது, காலை 7 மணிக்கு சிறிய ஏட்டை தூக்கிக் கொண்டு பள்ளிவாசக்குப் போவோம். அங்கே அலீஃப், பே, தே என்று படிக்கச் சொல்லித்தருவார். அவரை 'ஆலிம்சா', 'ஆலிம்சா' என்று நாமெல்லாம் கூப்பிட்டு, கூப்பிட்டு, அவரை ஆலிம்சாவாகவே இந்த முஸ்லிம் சமுதாயம் பேர் வைத்து விட்டது. அதனால்தான், இந்தக் கட்டுரையிம் 'ஆலிம்சா' என்று குறிப்பிட்டுள்ளேன். சரி, உண்மையிலேயே, இந்த 'ஆலிமுன்' என்ற அரபி வார்த்தைக்கு என்ற அர்த்தம் என்று பார்த்தால் நான் அவரை நாம் 'ஆலிம்சா' என்று கூப்பிடுவது சரியா? என்று சிந்திக்க முடியும்.

'ஆலிமுன்' என்ற வார்த்தை 'கற்றவன்' என்ற அர்த்தத்திம், 'அறிந்தவன்' என்ற அர்த்தத்திம் பயன்படுத்தப்பட்டுள்ளது. குர்ஆனில் இந்த 'ஆலிமுன்' என்ற வார்த்தையை பல இடங்களில் அல்லாஹ் உபயோகப்படுத்தியுள்ளான் அதில்,

"…. மறைவானவற்றையும், வெளிப்படையான வற்றையும் நன்கறியும் அவனிடத்தில் பின்னர் நீங்கள் கொண்டு வரப்படுவீர்கள் ….." *அல்குர்ஆன் 9:94*

இந்த ஆயத்தில் 'நன்கறிபவன்' என்ற அர்த்தத்தில் அல்லாஹ் தன்னையே குறிப்பிடுகின்றான். இதே அர்த்தத்தில் 9:105, 13:9, 23:92, 32:6, 34:3, 35:38, 39:46, 59:22, 62:8, 64:18 மேற்கண்ட ஆயத்துகளில் அல்லாஹ் குறிப்பிட்டுள்ளான்.

அடுத்து, 'அறிவுடையோர்' என்ற அர்த்தத்திம் 'சிந்தித்து அறிபவர்' என்றும் அல்லாஹ் பயன்படுத்தி உள்ளான்.

"இவ்வுதாரணங்களை நாம் மனிதர்களுக்காக விளக்கி வைக்கிறோம், ஆனால் இவற்றை சிந்தித்து அறிவோர் தவிர வேறெவரும் உணர்ந்து கொள்ள மாட்டார்கள்". *அல்குர்ஆன் 29:43*

மேம் 'அறிந்தவர்கள்' என்ற அர்த்தத்திம் அல்லாஹ் இந்த வார்த்தையை பயன்படுத்தி உள்ளான்.

(இவை) குழப்பமான கனவுகளேயாகும். எனவே நாங்கள் (இக்) கனவுகளுக்கு விளக்கம் கூற 'அறிந்தவர்கள் அல்லர்' என்று கூறினார்கள். (12:44). இதே அர்த்தத்தில் 21:51,81, 30:22 ஆகிய வசனங்களில் அல்லாஹ் குறிப்பிடுகிறான். ஆக, மேற்கண்ட வசனங்களை கூர்ந்து படிக்கும் போது, 'அறிந்தவன்' 'அறிவுடையவன்' 'கற்றவன்' போன்ற அர்த்தங்கள் இந்த 'ஆலிமுன்' என்ற வார்த்தைக்குக் கொடுக்க முடியும் என்பது தெளிவாகிறது.

இப்போது தான் நாம் சிந்திக்க வேண்டும் 'அறிந்தவன்' என்றால் எதை அறிந்தவன்? இந்த உலகத்தில் அனைத்தையும் அறிந்தவர் எவராவது இருக்கின்றாரா? அல்லது ஒவ்வொரு வரும் ஒரு சில விஷயங்களை அறிந்தவராக இருக்கின்றாரா? என்று பார்த்தால், அனைத்தையும் அறிந்தவன் அல்லாஹ் ஒருவனைத் தவிர

வேறு யாருமில்லை என்பது தெள்ளத் தெளிவு. அதனால்தான் 'அலீமுன்' என்ற அரபிப்பதத்தை குர்ஆனில் பெரும்பாலான இடங்களில் தனக்கே அல்லாஹ் பயன்படுத்திக் கொள்கிறான். 100க்கும் மேற்பட்ட இடங்களில் 'ஆலீமுன்' என்ற வார்த்தை வருகிறது. அதில் ஒன்றிரண்டு இடத்தைத்தவிர மீதமுள்ள அனைத்து இடத்திம் 'அறிந்தவன்' என்ற அர்த்தம் தரும் 'ஆலீமுன்' என்ற வார்த்தையை தனக்கே பயன்படுத்திக் கொள்கிறான் அல்லாஹ். (பார்க்க : 2:29, 2:95)

சரி, இப்போது இந்த உலகத்தில் ஒரு சிலருக்கு 4,5 மொழிகள் தெரியும். சிலருக்கு 10 வரை தெரியும், மிகவும் அரிதாக சில பேர்களுக்கு 16,18 வரை தெரியும். ஆனால், உலகத்தில் எத்தனை மொழிகள் இருக்கிறது. 'அத்தனையும் அறிந்தவன்' அல்லாஹ் ஒருவன் இல்லையா?

நம்மில் பலருக்கு, ஆங்கிலம் தெரியும். அதில் அதிகம் புலமை உடையவர்களாக இருப்பவர்களை நாம் 'ஆலீமுன்' என்று சொல்வதில்லை English Literature என்று சொல்கிறோம்.

நம்மில் பலருக்கு தமிழ் இலக்கணம், இலக்கியம் தெரியும். அதிகம் அதில் புலமையுடையவர்கள் இருப்பார்கள்

அவர்களைப் பார்த்து 'ஆலீமுன்' என்று சொல்வதில்லை. மாறாக, 'தமிழ் அறிஞர்' என்று சொல்கிறோம்.

அதுபோலவே, ஹிந்தி, மலையாளம், கன்னடம் மொழிப் புலமையுடையவர்களை அந்தந்த மொழியில் தேர்ந்தவர்கள் என்ற கருத்துப்பட மொழியோடு சேர்த்து 'அறிஞர்' என்று சொல்கிறோம்.

ஆனால், அரபி மொழியை படித்தவர்களை மட்டும் 'அரபி அறிஞர்' என்று சொல்வதில்லை. மாறாக, 'ஆலிமுன்' என்று சொல்லி விடுகிறோம். 'ஆலிமுன்' என்ற வார்த்தை 'பொதுப் பெயர்ச்சொல்' இந்தப் பொதுப் பொதுப் பெயர்ச் சொல்லை தனி மனிதனுக்கு வைக்க முடியுமா? என்று சிந்தித்துப் பார்க்க வேண் டும்.

இதில் என்ன வேடிக்கை என்றால், நம்ம ஊர் மத்ரஸாக்களில் படிக்கும் பெரும்பாலான மாணவர்களுக்கு 5 நிமிடம் தொடர்ந்து அரபியில் பேச முடியாது. மேலே குறிப்பிட்டு இருக்கிற பாராவை அப்படியே அரபியில் மொழி மாற்றம் செய்ய முடியாது. இப்படித்தான் பெரும்பாலான மாணவர்களின் கல்வித் தகுதி இருக்கிறது. சொல்லிக் கொடுக்கும் ஆசிரியர்களின் தகுதியும் இதுதான்! பெரும்பாலான அரபி மொழி போதிக்கும் 'ஆலிம்சா'க்களுக்கு அரபியில் பேசத் தெரியாது. அரபியில் Translate செய்யத் தெரியாது. ஆனால், 7 வருடம் மதரஸாவில் படித்து விட்டால் எல்லாம் தெரிந்தது போன்று பெருமை அடிக்கத் தெரியும். 5 வருடம் மத்ரஸாவில் படித்து விட்டால், அனைத்தையும் படித்தது போல் மமதை கொள்ளத் தெரியும். 4 வருடம் மத்ரஸாவில் படித்து விட்டால், தன்னை மிஞ்சியவன் எவனுமில்லை என்று சொல்லத் தெரியும். நாங்கள் எல்லாம் 'ஆலிம்கள்' அவர்கள் எல்லாம் 'அன்ஆம்'கள் அதாவது கால்நடைகள் என்று சொல்லத் தெரியும். உண்மையில், இந்தியாவையை நாம் ஆய்வு செய்து பார்த்தால், ஒரு சில அரபிக் கல்லூரிகள் தவிர 99 சதவீதம் கல்லூரிகளில் படிப்பவர்களுக்கு விட முடியும். ஆனால், இவர்கள், தங்கள் தலையில் தலைப்பாகையை கட்டி விட்டால், 'பெரிய ஆள்' என்று நினைத்து தன்னை மிஞ்சியவன் யாருமில்லை என்று பெருமையடிப்பார்கள்.

சரி, இப்போது 'ஆலிமுன்' என்ற பதத்தைப் பார்க்கும் போது, இந்த உலகத்தில் பல்வேறு மொழிகள்,

கலைகள், தொழில்கள், தொழில் நுட்பங்கள் இருக்கின்றன. ஒவ்வொருவரும் ஒவ்வொரு விஷயத்தில் ‘அறிந்தவனாக’ இருக்கின்றான்.

ஒருவனுக்கு ஆங்கிலம் சரளமாக வரும் நல்ல புலமையுடையவன். இவன் ‘அறிந்தவன்’ எதை அறிந்தவன்? ஆங்கிலத்தை அறிந்தவன். இவன் எனக்கு ஆங்கிலம் தெரியும் என்று பெருமையடித்தால் நாம் ஒத்துக் கொள்வோமா? இது போன்ற எல்லா மொழிகளையையும் தனித்தனியே தெரிந்த, ஒவ்வொருவனும், நான் இந்த மொழியை படித்தால் ‘சிறந்தவன்’ என்றும் சொல்ல முடியாது. சொல்லவும் மாட்டான். ஆனால், அரபி அறைகுறையாகப் படித்து விட்டு, ‘என்னை மிஞ்சியவன் எவனுமில்லை’ என்று இறுமாப்பு கொள்பவன் இந்த அரபி படித்தவன் தான் என்றால் அது மிகையாகாது.

இன்னொரு கேலிக்குரிய விஷயம் என்னவென்றால், அரபி படித்தேன் என்று சொல்லி 7 வருடத்தில், 5 வருடத்தில், 4 வருடத்தில் ‘ஆலிம்’ என்று வெளிவருபவர் களுக்கு இந்தியாவின் பிரதமர் யார்? என்று கேட்டால் இரண்டு முறை யோசித்துதான் பதில் சொல்வார்கள். உலக விஷயங்களும், ஞானங்களும், பொது விஷயங்களும் எதுவுமே இவர்களுக்கு சொல்லிக் கொடுக்கப்படுவதில்லை. ஆனால், ஆங்கிலம் படித்தவன் தன்னுடைய கல்வியை வைத்து உலக விஷயங்களையும், நாட்டு நடப்புகளையும், விஞ்ஞானத்தைப் பற்றியும், பொருளாதாரத்தைப் பற்றியும், வேலை வாய்ப்புகள் பற்றியும், தொழில்கள் பற்றியும் அறிந்து வைத்திருக்கிறான். இப்படிப்பட்டவன் ‘ஆலிமுன்’ என்று சொல்லிக் கொள்வதில்லை. ஒன்றுமே தெரியாதவன், 7 வருடம் நவலூ பாடத்தையும், சர்ஃப் பாடத்தையும், கட்டுக்கதைகள் கலந்து உள்ள தஃப்சீர் பாடத்தையும் படித்து விட்டு, தலையில் தலைப்பாகைகட்டி தன்னை ‘ஆலிமுன்’ என்று சொல்லிக் கொள்கிறான்.

ஆங்கிலத்தையும் படித்து விட்டு, அரபியும் படிக்கும் ஒரு சில பேர்கள், ஆங்கிலத் திறமையை வைத்து உலக விஷயங்களை அதிகம் தெரிந்து கொண்டு அதன் மூலம் கிடைக்கும் கல்வியைக் கொண்டு பெருமை அடிக்கத் தொடங்கி விடுகிறார்கள்.

‘தன்னை அரபியில் புலமை பெற்றவர்கள்’ என்று பெரும்பாலான அரபி மத்ரஸாவில் படிக்கும் மாணவர்களும், ஆசிரியர்களும் சொல்லிக் கொள்ளவே முடியாது. ஏனென்றால், இவர்களின் கல்வித் திட்டம் அந்த லட்சணத்தில்தான் இருக்கிறது.

இப்படிப்பட்ட தகுதியில் உள்ளவர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா? நீங்கள் எல்லாம் மற்ற மொழிகளைப் படித்தீர்கள். ஆனால், நாங்கள் அல்லாஹ்வின் வேதமான குர்ஆனைப் படித்தோம் நபி(ஸல்) அவர்களின் நடைமுறையைப் படித்தோம். அதனால்தான் நாங்கள் ‘ஆலிம்கள்’ என்று சொல்பவர்களும் உண்டு. ஆனால், இதிம் அவர்கள் பொய் சொல்கிறார்கள். இவர்கள் குர்ஆனை ஒழுங்காகப் படித்து இருந்தால், குர்ஆனுக்கு தப்பு தப்பாக அர்த்தம் கொடுப்பார்களா? இவர்கள் ஹதீஸை படித்து இருந்தால், ஹதீஸுக்கு தப்பு தப்பாக அர்த்தம் கொடுப்பார்களா?

அல்லாஹ்வின் அச்சத்தோடு இவர்கள், குர்ஆனைப் படித்திருந்தால், குர்ஆனுடன் இவர்கள் விளையா டுவார்களா? அல்லாஹ்வின் அச்சத்துடன் இவர்கள் ஹதீஸைப் படித்து இருந்தால் ஹதீஸுடன் இவர்கள் விளையாடுவார்களா? மத்ஹபுவாதிகள் என்று சொல்ம் அந்த மத்ஹபு சார்ந்த ஆலிம்கள் (ஆலிம்கள் என்றால் தான் புரியும் என்பதால் ‘ஆலிம்கள்’ என்று உபயோகப்படுத்தி உள்ளேன் உண்மையில் இவர்கள்

ஆலிம்கள் இல்லை) குர்ஆனுக்கு மாற்று விளக்கம் கொடுக்கிறார்களே? இவர்களா? குர்ஆனை படித்தவர்கள்.

தவ்ஹீதுவாதிகள் என்று தம்பட்டம் அடிக்கும் ஆலிம்கள் *'அல்லாஹ்வுக்கும் தெரியும், தனக்கும் தெரியும்* என்று வாதிட்டு, குர்ஆனுக்கு மொழியாக்கம் செய்கிறாறே?! *பார்க்க : அல்குர்ஆன் 3:7 பி.ஜே. மொழியாக்கம்*

எத்தனை ஹதீஸ்களுக்கு சொந்த விளக்கம் கொடுக்கிறார் இவர் இதற்கெல்லாம் காரணம் என்ன என்று பார்த்தால், இவர்கள் பயிற்றுவிக்கப்பட்ட இடம் அப்படி "ஓசி சோறு ஓசி தங்குமிடம் ஓசி புத்தகம், ஓசி நோட்டு மக்களிடத்தில் இறையச்சம் உள்ளவர்கள் போல் காண்பித்து ஓசி விருந்து இப்படி எல்லாமே ஓசியில் படித்தால், இவர்கள் படித்த படிப்பை மட்டும் விலைபேசி விட்டார்கள்."

மார்க்கப் பணியை கூலி வாங்காமல் செய்யவேண்டும் என்று எந்த மத்ரஸாவது போதிக்குதா? படித்து கொடுக்கும் ஆசிரியர் கூலிக்குப் போகும்போது மாணவன் அதை விட அதிக சம்பளம் எதிர்பார்க்க மாட்டானா? அரபிக் கல்லூரி நடத்தும் முதல்வர்கள் எப்படி என்றால், தனக்கு என்னமோ பெரிய பதவி கிடைத்ததைப் போன்று உள்ளுணர்வு ஏற்பட்டு, யாரையும் மதிக்க மாட்டார். மாணவர்களை, அரட்டி, மிரட்டி Principal வருகிறார் என்றால், பயந்து நடுங்கும் மாணவர்கள் 'குர்ஆன் வசனத்தை ஓதினால் நடுங்குவார்களா? என்று சந்தேகமே!'

இன்றைய கால அரபிக்கல்லூரிகள், 10 மாணவர்களையும் 20 மாணவர்களையும், 30 மாணவர்களையும் கொண்டது. ஒருவருடத்தில் பட்டம் வாங்கும் மாணவர்களைப் பார்த்தால் இரண்டு, மூன்று, நான்கு என்று தான் இருப்பார்கள். சரி, இந்தப் பட்டத்தை வைத்து ஏதாவது தொழில் செய்ய முடியுமா? அதுவும் முடியாது. இவர்கள் கொடுக்கும் பட்டம் எந்தப் பிரயோஜனமும் இல்லாதது. எங்காவது 'இமாமத்' கூலிக்கு செய்யலாம். அல்லது 'மோதினார்' வேலை பார்க்கலாம். அதற்கு மிஞ்சி, மிஞ்சிப் போனால், இமாமுக்கு 3000ம், மோதினாருக்கு 2000 ம் கிடைக்கும். இதை வைத்து குடும்பத்தை காப்பாற்ற முடியாத இந்த அப்பாவி மாணவர்கள், ஃபாத்திஹா, கத்தம், நாரியா, மாரியா, காரியான்னு ஓதி வயிறு வளர்க்க வேண்டிய நிர்பந்தம். இவர்கள் இலட்சணம் இப்படி இருக்க இவர்கள்தான் மார்க்கத்தை பரப்பப் போகிறார்களாம், இவர்கள்தான் நபிமார்களின் வாரிசுகளாம்.

"கேழ்வரகில் நெய் வடிகிறது என்றால் கேட்பவருக்கு மதி எங்கே போச்சு" என்று தமிழ் பழமொழி இருக்கு. இவர்கள் எல்லாம் மார்க்கத்தைப் பரப்ப தகுதி அற்றவர்கள். இப்படிப்பட்ட கல்விச்சாலையில் படித்தவர்களால் மார்க்கத்தை பரப்பவே முடியாது. எல்லாம் வெத்து வேட்டு நபி(ஸல்) அவர்கள் பாசறையில் படித்தார்களே ஸஹாபாக்கள் அவர்களால் மார்க்கத்தைப் பரப்ப முடிந்தது. ஏனென்றால், அவர்கள் தன்னலம் பாராமல் மார்க்கத்தை கற்றவர்கள். அவர்கள்தான் 'ஆலிம்கள்' அல்லாஹ்வின் அச்சம் உடைவர்களாக இருந்தார்கள் அவர்கள்தான் 'ஆலிம்கள்'. தன்னலம் பாராமல் இந்த மார்க்கத்துக்காக தன்னடகத்துடன் பாடுபட்டார்களே அவர்கள்தான் ஆலிம்கள்.

"நிச்சயமாக அல்லாஹ்வின் அடியார்களில் அவனுக்கு அஞ்சுபவர்கள் எல்லாம் ஆலிம்கள்". *அல்குர்ஆன் 35:28*

இன்றைய அரபிக் கல்லூரிகள் மாணவர்கள் இல்லாமல் தவிக்கின்றது. ஏன் தெரியுமா? அப்படி மாணவர்கள் வரவில்லையென்றால், பெரும்பாலான அரபி ஆசிரியர்களுக்கு, அதாவது ஏற்கனவே ஓசி சோற்றில் படித்துப் பட்டம் பெற்று உள்ளார்களே அவர்களுக்கு வேறு வேலை எதுவுமே தெரியாது. மாணவர்களை நம்பியே வாழக்கூடிய பெரும்பாலான ஆசிரியர்கள் தமிழ்நாட்டில் மட்டுமல்ல இந்தியா முழுவதும் இருக்கின்றார்கள். இந்த இழிநிலை ஏன் தெரியுமா? கல்வித்திட்டம் மத்ரஸாக்களில் கல்வித்திட்டம் சரியில்லை. எல்லாமே பழங்காக் கல்வித் திட்டம் குர்ஆனில் அல்லாஹ் சொல்கிறான் :

“மனிதனுக்கு அவன் அறியாதவற்றை எல்லாம் கற்றுக் கொடுத்தான்”. *அல்குர்ஆன் 96:5*

“சீனா சென்றாவது நீங்கள் கல்வியைத் தேடிக் கொள்ளுங்கள்” என்று நபி(ஸல்) அவர்கள் இந்தக் கருத்துப்பட கல்வியின் சிறப்பை கூறியுள்ளார்கள். ஆனால், இந்த அரபிக் கல்லூரி ஆலிம்சாக்கள், பழைய கால பாடத்திட்டத்தையும், ஒன்றுக்கும் உதவாத கல்வித்திட்டத்தை வைத்து மாணவர்களின் 7 வருடத்தையும், 5 வருடத்தையும், 4 வருடத்தையும் கெடுப்பவர்களே இந்த அரபிக்கல்லூரி ஆலிம்சாக்கள்தான்.

உலகக்கல்வி, மார்க்கக்கல்வி என்று கூறுபோட்டு, உலகம் தனி, மார்க்கம் தனி என்ற மாயைத் தோற்றத்தை ஏற்படுத்தி விட்டார்கள்.

“உலக வாழ்க்கை மறுமையின் விளை நிலம்” என்ற பொருள்பட நபி(ஸல்) அவர்கள் சொன்னதை இவர்கள் மறந்து விட்டார்களா? அல்லது வேண்டுமென்றே மறுக்கிறார்களா?

+ ஒரு டாக்டர் குர்ஆனிம், ஹதீஸிம் தேர்ச்சி பெற முடியாதா?

+ ஒரு இன்ஜீனியர் குர்ஆனிம், ஹதீஸிம் தேர்ச்சி பெற முடியாதா?

+ ஒரு தொழில் அதிபர் குர்ஆனிம், ஹதீஸிம் தேர்ச்சி பெற முடியாதா?

+ ஒரு கம்ப்யூட்டர் இன்ஜினியர் குர்ஆனிம், ஹதீஸிம் தேர்ச்சி பெற முடியாதா?

இன்ஷா அல்லாஹ் முடியும்! ஆனால், இந்த அரபிக் கல்லூரி ஆலிம்சாக்கள் டாக்டருக்குப் படித்தால், குர்ஆன் ஹதீஸ் படிக்க முடியாது. இன்ஜினியருக்குப் படித்தால் குர்ஆன், ஹதீஸ் படிக்க முடியாது. வெறும் குர்ஆனையும், ஹதீஸையும் படித்தாலே அதிலேயே உலகக் கல்விக்கு தடை இல்லையே? ஏன் சிந்திக்க மறுக்கிறீர்கள்? அரபி அரை, குறையாகப் படித்து விட்டு உங்களை ‘ஆலிமுன்’ என்று சொல்லிக் கொள்ள ாதீர்கள் காழ்ப்புணர்ச்சி கொள்ளாமல், உங்கள் அரபிக் கல்லூரிகளை நவீன மயமாக்குங்கள். அதில் அரபிக்கு முக்கியத்துவம் கொடுங்கள் அரபியிலேயே பேசவும், எழுதவும் தயார்படுத்துங்கள். தொழிக்காக தொழிற்கல்விகளை அரபிக் கல்லூரிகளில் ஏற்படுத்துங்கள் 7 வருடத்தில் மிகச் சிறந்த நிபுணராக வர முடியும். எந்தத் துறையை தேர்ந்தெடுத்தாம், அந்தத் துறையில் 5 வருடத்தில் அதிகத் திறமையுடன் வர முடியும். அரபி என்பது ஒரு மொழிதான் என்பதை உங்கள் உள்ளங்களுக்கு சொல்ங்கள். அது படிப்பதால் எந்த சிறப்பும் இல்லை என்பதை ஒத்துக் கொள்ளுங்கள். நீங்கள் அரபி படித்ததால் மட்டும் அதுவும் அரை குறையாய் படித்ததால் மட்டும் அடுத்தவர்கள் கருத்தை குப்பையில் போடாதீர்கள்.

குர்ஆன் இன்று எல்லா மொழிகளிம் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. அதை அந்தந்த மொழியிலேயே அப்படியே படித்து தன் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள முடியும் என்பதை சொல்லிக் கொடுங்கள். அல்லாஹ்வின் அச்சம்தான் எந்தத் தொழில் செய்தாம் வேண்டும் என்பதை மாணவர்களுக்கு உணர்த்துங்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு வேலை செய்து கொண்டே அந்த வேலையை அல்லாஹ்வும், அவனது தூதரும் சொன்னதுபடி நியாயமாக இருந்தால் அதுதான் இறையச்சம் என்று சொல்லிக் கொடுங்கள் குர்ஆனில் ஒரு கருத்தை ஆயத்தை சுட்டிக்காட்டி யார் சொன்னாம் ஏற்றுக்கொள்ளுங்கள் அவன் அரபி படித்தானா? மத்ரஸாவில் ஒசி சாப்பாட்டில் அரை, குறை அரபி படித்தவனா? மவ்லவியா? ஆலிமா? என்று பார்த்து உண்மையை மறைக்காதீர்கள்.

அறிந்து கொண்டே உண்மையுடன் பொய்யை கலக்காதீர்கள் அரபிக் கல்லூரிகளில், காலத்தின் அவசியம் கருதி, உங்களை மாற்றிக் கொள்ளவில்லை யென்றால், வருங்காலங்களில் மாணவர்களுக்கு மாதச் சம்பளம் கொடுத்துதான் மார்க்கத்தை சொல்லிக் கொடுக்க வேண்டியிருக்கும் என்பதை மறந்து விடாதீர்கள். அரபிக்கல்லூரிகளை ஆலிம்சாக்களே அழித்தே விடுவீர்கள் என்பதை உங்கள் கல்வித்திட்டமும், உங்கள் சிந்தனைகளும் உணர்த்துகிறது கோபப்படாமல் தனிமையில் மனதோடு சிந்தித்துப் பாருங்கள்.

குறிப்பு : அன்புள்ள இஸ்லாமிய சகோதரர்களே! சகோதரிகளே! இந்தக் கட்டுரையை படித்தவர்களுக்கு ஓர் உண்மை விளங்கி இருக்கும். அது என்னவென்றால், பன்னெடுங் காலமாக ‘ஆலிம்கள்’ என்று சொல்லி தம்மைத்தாமே புகழ்ந்து கொண்டு, சமுதாயத்தை ஏமாற்றி, வயிறு வளர்த்தால்தான் இந்தியாவிம், மற்ற நாடுகளிம் ‘இஸ்லாம்’ என்றால் எது? என்று பிரித்தறிய முடியாத சூழ்நிலையில், முஸ்லிம் மக்கள் அனாச்சாரங்களில் ஈடுபட்டுள்ளனர். மார்க்கத்தைப் பரப்ப ஆலிம்களால் மட்டும்தான் முடியும் என்ற இந்த ‘போலி’ ஆலிம்களின் கூற்றில் மதி மயங்கி, மக்கள், முஸ்லிம் மக்கள் மார்க்க்தை சொல்லத்தகுதி உடையவர்கள் ‘ஆலிம்சா’ என்று விளங்கி உள்ளனர். இந்த எண்ணத்தை உடைத்து, எல்லோரும் அவர் அவர் மொழியில் குர்ஆனைப் படித்து, உணர்ந்து, அதன்படி நடந்து, மன்ற மக்களை இஸ்லாத்தின் பக்கம் அழைக்க வேண்டும். ‘அந்நஜாத் படிக்காதீர்கள்’ என்று எல்லா மதரஸாக்களிம் முதல்வர்கள் மாணவர்களை தடுக்கிறார்கள். இதனால், பொதுமக்கள் இந்த கட்டுரையை ஜெராக்ஸ் எடுத்து, உங்கள் ஊரில் உள்ள அரபி மதரஸா மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் கொடுத்து உண்மையை உணர்த்துங்கள்.

டிசம்பர் 2005 அந்நஜாத்